# கழுகின் சத்தம்

## மார்ச் 18, 2024

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

மேலும், இங்கே மட்டுமல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஆனால் நீங்கள் தெருவில் நடந்து போய்க் கொண்டிருக்கும் போதும், நீங்கள் எங்கே இருந்தாலும், விசுவாசிகள் என்றும் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் என்றும் உரிமை கொண்டாடி, (அதை உறுதியாகக் கூறுகிற) நீங்கள் எங்கேயிருந்தாலும், தேவ தூதர்கள் உங்களுடனே வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நினைவிருக்கட்டும்

**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து**

## செய்தி: செல்வாக்கு, ஆகஸ்டு 3, 1963 மாலை

81. இயேசு, ‘இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருந்தாலும், நான் அவர்கள் நடுவிலே இருப்பேன்’ என்றார்.

அப்படியானால் அது நாம் காணக் கூடாத, நம்முடைய ஐந்து புலன்கள் தொடர்பு கொள்ளாத ஒரு உலகத்தில் அவரைத் தோன்றச் செய்கிறது.

இயேசு கிறிஸ்து இங்கே பிரசன்னமா யிருக்கிறார். நம்மால் அதை உணர முடியு மானால்!

82. மேலும், இங்கே மட்டுமல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஆனால் நீங்கள் தெருவில் நடந்து போய்க் கொண்டிருக்கும் போதும், நீங்கள் எங்கே இருந்தாலும், விசு வாசிகள் என்றும் கர்த்தருக்குப் பயப்படுகிற வர்கள் என்றும் உரிமை கொண்டாடி, (அதை உறுதியாகக் கூறுகிற) நீங்கள் எங்கேயிருந் தாலும், தேவ தூதர்கள் உங்களுடனே வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நினைவிருக் கட்டும்.

நீங்கள் செய்கிற யாவற்றையும், உங்கள் மனதின் வழியாகக் கடந்து செல்கிற ஒவ் வொரு நினைவையும் அவர்கள் கவனிக் கிறார்கள், உங்களைக் குறித்த எல்லா வற்றையும் அவர்கள் அறிவார்கள்.

**ஆகையால், நாம் அதைக் குறித்த உணர்வுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.**

83. அதைக் குறித்த உணர்வு நமக்கு இல்லை என்றால், நீங்கள் எந்த விதமாகவும் நடந்து கொள்வீர்கள்.

எனவே பெரும்பாலும் இன்று ஜனங்கள், அநேக ஜனங்கள் கர்த்தராகிய இயேசுவின் பிரசன்னத்தைக் குறித்த உணர்வில்லாதவர்களாய் இருக்கிறார்கள், இப்பொழுது (அவர்களுக்கு) நமக்கு சம்பவிக்கிற இந்த சரியல்லாத காரியங்களை நாம் கொண்டிருப்பதற்கு அதுதான் காரணம்.

நான், “அப்படியானால் நான் உங்களுக்கு என்ன கூற முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்பதைக் கேளுங்கள். நான் உங்களுக்கு சத்தியத்தைக் கூறுகிறேன். தேவன் என்ன கூறினாரோ அதைத் தவிர வேறு எதையும் என்னால் கூறமுடியாது” என்றேன்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-01-03E - COD #3

*15. ஒரு சமயம் ஒரு பெண், லாஸ் ஏஞ்சலிலிருந்து, சுமார் முப்பத்தைந்து அல்லது நாற்பது நிமிடங்களாக அல்லது அதற்கு மேலாக, ஒரு நீண்ட தூரத்திலிருந்து என்னிடம் பேசினாள். ஐம்பது டாலர் தொலைபேசி கட்டணம் அவளுக்கு செல வானது என்று யூகிக்கிறேன். அவள் தன் னுடைய புருஷனை விட்டுவிட்டு வேறொரு மனிதனை விவாகம் செய்வது தனக்கு சட்ட ரீதியாகவும் சரியான ஒன்றாகவும் உள்ளது என்று நான் கூற வேண்டுமென்று முயற்சி செய்து கொண்டிருந்தாள். நான் அதைச் செய்யமாட்டேன். இல்லை! நான், "இல்லை ஐயா!" என்றேன்.*

அவள், "நல்லது, என் கணவர் ஒரு பாவி, இந்த மனிதனோ ஒரு கிறிஸ்தவன்" என்றாள்.


**16.** நான் "அதற்கும் இதற்கும் தொடர்பில்லை. நிச்சயமாக நீ விபசாரத்தில் இருப்பாய்" என்று கூறினேன். அவள், "நல்லது, நான் எலும்புருக்கி வியாதி (tuberculosis) உடையவள், ஆகவே இந்த மனிதன் எனக்கு இல்லையெனில் நான் வாழ வேண்டிய அவசியமேயில்லை" என்றாள்.

**17.** நான், "நீங்கள் மோகம் கொண்டிருக்கிறீர்கள். அன்பு, நேசம் கொண்டிருக்கவில்லை, ஏனெனில் உங்களால் அவ்வாறு இருக்க முடியாது, அவ்வளவுதான், ஏனெனில் அவர்தான் உங்கள் கணவர். மரணம் உங்களை பிரிக்கும்வரை அவருடன் வாழ நீங்கள் வாக்கு கொடுத்திருக்கிறீர்கள். அதிலிருந்து வேறெதுவாயிருந்தாலும் அது விபசாரம் ஆகும்" என்றேன். அவள் பேசிக் கொண்டேயிருந்தாள். நான் கூறினேன்

“ஸ்திரீயே, அதில்...” அவள், “நீர் மாத்திரம் அது சரி என்று என்னிடம் கூறினால் போதும்” என்றாள். நான், “நான் அதைச் செய்ய மாட்டேன்” என்றேன். நான் கூறி னேன், “என்னால்...” அவள், “ஆம், சகோ தரன் பிரன்ஹாம், நாங்கள் உம்மிடம் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறோம்” என்றாள்.

*18.* நான், “அப்படியானால் நான் உங்களுக்கு என்ன கூற முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்பதைக் கேளுங்கள். நான் உங்களுக்கு சத்தியத்தைக் கூறுகிறேன். தேவன் என்ன கூறினாரோ அதைத் தவிர வேறு எதையும் என்னால் கூறமுடியாது” என்றேன். உரைக்கப்பட்ட வசனத்தை அது உண்மை என்று தேவன் கூறினார். “ஆகவே அது சரியாக அவ்விதமாகத்தான் இருக்கும். பாருங்கள்? நான் அந்த விதமாகத்தான் அது - அது இருந்தாக வேண்டும், அந்த விதமாகத்தான் அது இருக்கவேண்டும்” என்று கூறினேன்.

அதற்கு அவனோ, "அப்பா, நான் உங்களுடைய அடிச்சுவடுகளையே பின் தொடர்ந்து வர முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்” என்றானாம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: இங்கே உனக்கு என்ன காரியம்?, 59-0301 E

8. சில ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த ஒரு பழைய சம்பவம், அதாவது இங்கிலாந்தில் ஒரு மனிதன் இருந்தானாம். அவன் கிறிஸ்துமஸ் நேரத்தின்போது வெளியே சென்று ஒரு சிறு நட்பின் ஐக்கியத்திற்காக மது அருந்தலாம் என்று எண்ணினானாம். அப்பொழுது அவன் தன்னுடைய அயலகத்தார் மத்தியில் சென்று, தன்னுடைய அன்பளிப்புகளைப் பரிமாறிக் கொண்டிருக்க, அப்பொழுது ஒவ்வொருவரும் அவனிடத்தில், “ஜான், இப்பொழுது இந்த மதுவிலிருந்து சற்றுப் பருகு” என்று கூறினராம். எனவே இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமும் சிறுக

சிறுக குடித்தபடியால், அவன் உண்மை யாகவே போதை கொண்டவனானான்.

9. அப்பொழுது அவன் வீட்டிற்கு வீதியில் திரும்பி வந்து கொண்டிருந்த போது, சுமார் ஆறு அங்குல கன அளவுகொண்ட பனிமழை உண்டாயிருந் ததாம். அவனுடைய சிறு பையன் அவனைப் பின்தொடர்ந்து வந்து கொண் டிருந்தானாம். இவனால் தன்னுடைய மகனை அழைத்துச் செல்ல முடியவில்லை யாம். எனவே வீட்டிற்கு தன்னுடைய வீதி வழியாக செல்லும்போது, அவன் தற்செய லாக திரும்பி தன்னுடைய சிறு பையன் பனிமழையில் புரளுவதைக் கவனிக்க நேர்ந்ததாம். அப்பொழுது அவன், “மகனே, நீ ஏன் பனி மழையில் புரண்டு கொண்டிருக்கிறாய்?” என்று கேட்டானாம்.

10. **அதற்கு அவனோ, "அப்பா, நான் உங்களுடைய அடிச்சுவடுகளையே பின் தொடர்ந்து வர முயற்சித்துக் கொண்டிருக் கிறேன்" என்றானாம். அப்பொழுது அவன் அந்த சிறுவனை தன்னுடைய கரங்களால் தூக்கியெடுத்து, "தேவனே, இந்நாள் முதற் கொண்டு நான் ஒரு போதும் மது அருந்தவே மாட்டேன்" என்று கூறினானாம்.**

11 யாரோ ஒருவர் உங்களுடைய அடிச்சுவடுகளை பின்பற்றப் போகிறார் கள். எனவே நாம் தொட்டிலிருந்து கல்வாரி வரையிலும் உள்ள அந்த நேர்ப்பாதையில் நடப்போமாக. அதுவே அடிச்சுவடுக ளாகும்; நாம் அவர்களை அதில் நடக்கச் செய்வோமாக.



# அவருடைய வார்த்தையினிமித்தம் துன்பப்படுவது அவருடைய கிருபையினால் வளரும் வேதனைகளாம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 64-01-12 ஷாலோம்

216. நீங்கள் “சகோ. பிரன்ஹாமே, என் தாயையும் தந்தையையும் குறித்தென்ன? என் மக்களைக் குறித்தென்ன? என் ஸ்தாபனத்தைக் குறித்தென்ன? அவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? என்னைத் தள்ளி விடுவார்களே” எனலாம். உன்னால் முன்னோக்கிப் பார்க்க முடியவில்லையென்றால், மேலே நோக்கிப் பார். முன்னோக்கிப் பார்க்க முயலாதே. உன் கையை அவர் கையில் போடு. அவர் உன்னை வழி நடத்தட்டும். மேலே நோக்கிப் பார். முன்னோக்கிப் பார்க்காதே. "என் நீண்ட தலை மயிரைக் குறித்தும், குட்டைக் கால்சட்டை அணிவதை நான் விட்டு விட்டதைக் குறித்தும், ஸ்தாபனத்

தைவிட்டு விலகினதைக் குறித்தும் அவர்கள் கேலி செய்கிறார்கள்" என்று நீ கூறலாம். ஊ! **அவருடைய நாமத்தினிமித்தம் துன்பப்படுவது அவருடைய கிருபையினால் வளரும் வேதனைகளாம்.** ஆம். **அவருடைய வார்த்தையினிமித்தம் துன்பப்படுவது அவருடைய கிருபையினால் வளரும் வேதனைகளாம்.** ஆம், ஐயா! **அது உனக்கு அருளப்பட்ட தேவனுடைய கிருபை என்பதை ஞாபகம் கொள்.** ஓ, என்னே!

217. பவுல் கூறினவண்ணமாக அல்லேலூயா. அவனுக்கு ஒரு பலவீனம் இருந்தது. ஏதோ ஒன்று அவனை தொல்லைப் படுத்திக் கொண்டேயிருந்தது. அவன்... பிசாசு அவனை குட்டிக் கொண்டேயிருந்தான் - குத்துக்கு மேல் குத்து. அதை அவனை விட்டு எடுத்துப் போடும்படிக்கு அவன் மூன்று தரம் கர்த்தரிடத்தில்

வேண்டிக்கொண்டான். அவன், "கர்த்தாவே, இது எனக்கு வேண்டாம், இதை என்னை விட்டு எடுத்து போடும்'' என்று வேண்டிக் கொண்டான்.

218. ஒரு இரவு கர்த்தர் அவனிடம் பேசினார். ''பவுலே என் கிருபை உனக்குப் போதும்” என்றார்.

219. பவுல் ''என் பலவீனங்களைக் குறித்து நான் மேன்மை பாராட்டுவேன். அதில் நான் மேன்மை பாராட்டுவேன். நீர் சுகமளிப்பவர் என்று நானறிவேன். நீர் வியாதியஸ்தரை சுகப்படுத்துவதையும், மரித்தோரை உயிரோடெழுப்புவதையும், பிசாசுகளைத் துரத்துவதையும், குருடரின் கண்களைத் திறப்பதையும் கண்டிருக்கி றேன். நான் உம்மை வேண்டிக்கொண்ட போது, உமது கிருபை எனக்குப் போது

மென்று கூறுகிறீர். அப்படியானால் என்னைத் தொல்லைப்படுத்தும் இந்த பிசாசு உமது கிருபையின் வளரும் வேதனைகளாம். என் பலவீனங்களைக் குறித்து நான் மேன்மைபாராட்டுவேன். ஏன் எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு'' என்றான். பாருங்கள்?

220. பாருங்கள், மற்ற சீஷர்கள் பெற்றிராததை அவன் பெற்றிருந்தான். அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் இவைகளுக்குப் பின்பு அவன் அவரைக் கண்டான். சிலர், "நான் அவரோடுகூட நடந்தேன்” என்கின்றனர். தெருவில் நடந்த ஒவ்வொருவரும் அவரோடு கூட நடந்தவர்களே. ஆனால் அவர் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிரோடெழுந்து, பரமேறின பின்பு அவர்

அக்கினி ஸ்தம்ப உருவில் திரும்பி வந்தபோது, அவர் பவுலுடன் பேசினார். அது மற்றவர்கள் பெற்றிருந்த அனுபவத் தைக் காட்டிலும் அதிகமான ஒன்று ஆமென்.

221. பவுல், "நான் என்னை உயர்த்திக் கொண்டு பெரிய வேத கலாசாலைகளை யும் மற்ற பெரியவைகளையும் கட்டாத படிக்கு எனக்கு வெளிப்படுத்தப்பட்டவை களுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என்னை அடித்து தாழ்த்தும்படிக்கு தேவன் சாத் தானின் தூதனை அனுமதித்திருக்கிறார்" என்றான். அவன், "நான் பலவீனமா யிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கி றேன்'' என்றான். ஆமென். ஆமென். கிரு பையின் வளரும் வேதனைகள்! ஆமென் அதில் நீண்ட நேரம் நாம் நிலைத்திருக்கக்

கூடும். ஏற்கனவே ஒரு மணி நாற்பத்தைந்து நிமிடங்கள் கடந்து விட்டது. அவருடைய கிருபையின் வேதனைகளை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

222. ஓ, அவர் தெருச்சந்தியை (Cross Roads). அனுமதிக்கக் கூடும். நம்மை சோதிக்க, நம்மை அவருடைய ஊழியத்துக்காக பரிபூரணப்படுத்த அவர் தெருச்சந்தியை அனுமதிக்கக்கூடும், இங்குள்ளதும், இதை ஒலிநாடாவில் கேட்கப் போவதுமான சபையே, அவர் அதை அனுமதிக்கக்கூடும். நம்மை ஊழியத்தில் உபயோகிக்க, அவர் தெருச்சந்தியை அனுமதிக்கக்கூடும்.

223. அவர் தானியேலுக்குச் செய்தது போல. ஒரு நாள் அவர் தானியேலுக்கு ஒரு சிறு தெருச்சந்தியை அளித்தார்.

அவன் பாபிலோனில் ஒரு பெரிய மனிதனாக விளங்கினான். அவர் ராஜா அவனுக்கு விரோதமாக எழும்பும்படி செய்து அவனைச் சிங்கங்களின் கெபி யிலே போடும்படி செய்தார். அது அவனை பரிபூரணப்படுத்த மாத்திரம் செய்தது. நிச்சயமாக செய்தது!

224. அவர் எபிரெய பிள்ளைகள் எரிகின்ற சூளைக்குள் செல்லும்படி செய் தார். அவர்கள் அவருடைய வார்த்தைக்கு உறுதியாய் நிற்க தீர்மானம் கொண்டார்கள்.

225. அவர் தெருச்சந்தியை அனு மதிக்கக் கூடும். நீங்கள் நீண்ட தலைமயிர் வைத்துள்ளதற்காக அவர்கள் உங்களை கேலி செய்யட்டும். நீங்கள் ஏன் உருளும் பரிசுத்தர் ஆனீர்கள் என்னும் உங்கள் சாட்சியைக் கேட்டு அவர்கள் கேலி

செய்யட்டும்.... அதற்காக. அவர்கள் உங்களைக் கேலி செய்யக் கூடும். பரவாயில்லை. அது ஒரு தெருச்சந்தி, அது ஒரு சிறு சந்திப்பு. அது ஒன்றை நிரூபிப்பதற்காகவே.

226. வார்த்தையில் நின்ற எபிரெய பிள்ளைகளுக்கு தெருசந்தி செய்த ஒன்றே ஒன்று. அவர்களுடைய கைகளையும் கால்களையும் கட்டியிருந்த கட்டுகளிலிருந்து அது அவர்களை விடுவித்தது.

227. உலக கட்டுகளிலிருந்து நம்மை விடுவிக்க, சில சமயங்களில் கடினமான சோதனைகள் அவசியமாயுள்ளன. நாம் என்ன செய்வோம் என்பதைக் காண, உங்களை உலகத்திலிருந்து பிரிக்க அவர் சில சமயங்களில் சிறு சோதனைகளை நமக்கு அனுமதிக்கிறார். வேறு விதமாகக்

கூறினால் உங்களுக்கு சிறு சோதனைகளை அவர் அனுமதித்து, ''மெதோடிஸ்டுகள் ஒருவரே சத்தியத்தைப் பெற்றுள்ளனர். அல்லது பாப்டிஸ்டு ஒருவரே, அல்லது பெந்தெகொஸ்தேயினர் ஒருவரே சத்தி யத்தைப் பெற்றுள்ளனர். என் சபை விசு வாசிப்பது போல் நீங்கள் விசுவாசிக்கா விட்டால், நீங்கள் விசுவாசிக்கவே யில்லை'' என்னும் கருத்தை உங்களை விட்டு எடுத்துப்போட்டு, உங்களை ஸ்தாபனத்திலிருந்து வெளியேற்று கிறார். ஒரு சிறு சோதனை உங்களுக்கு நேரிடு வதற்கு அவர் சில நேரங்களில் அனு மதிக்கிறார். ஒருக்கால் உங்களுக்கு வியாதிப்பட்ட குழந்தை இருக்கலாம். அல்லது மரணத்தருவாயில் ஏதாவதொன்று நேரிடலாம். அல்லது யாராவது ஒருவர் உங்களிடமிருந்து ஏதாவதொன்றைப்

பறித்துக் கொள்ளலாம். அது ஏன் நடக்கிறது? உங்களைப் பிரித்தெடுக்க, உங்களுக்கு ஒன்றைக் காண்பிக்க, உங்கள் கண்களைத் திறக்க, ஒருக்கால் நீங்கள் குறை கூறுவதற்காக வந்திருக்கலாம் ஒருக் கால் நீங்கள் குறை கூறுவதற்காகவே இந்த ஒலிநாடாவை நீங்கள் கேட்கலாம், ஒருக் கால் உங்களைக் கட்டியிருக்கும் உலகக் கட்டுகளிலிருந்து உங்களை விடுவிக்க. தேவன் அதை செய்யக்கூடும்.

228. ஆற்றில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதனைப் போல். நீங்கள் ஆற்றை அவனிலிருந்து விலக்குவதற்கு முன்பாக, அவனை ஆற்றிலிருந்து தூக்கியெடுக்க வேண்டும். அது உண்மை. முதலில் அவனை ஆற்றிலிருந்து நீங்கள் தூக்கி யெடுக்கவேண்டும். அப்பொழுது அவனை ஆற்றிலிருந்து நீங்கள் விலக்கி

விடுவீர்கள். சில சமயங்களில் தேவன் அவ்வாறு செய்ய வேண்டியதாயுள்ளது. அதை செய்ய அவர் சந்திப்பை, தெருச் சந்தியை அனுமதிக்கிறார். அவருடைய வாக்குத்தத்தங்களின் மேல் - வார்த்தை யின் மேல்நில்லுங்கள். அவை ஒருக்காலும் தவறாது. எதிர்காலம் அவருடைய கரங் களில் உள்ளது. அவர்கள் நின்றது போல் நீங்களும் நில்லுங்கள், விலகி விடாதீர்கள்.

229. ஆபிரகாம் அவனுடைய தெருச் சந்தியில், தேவன் தன் குமாரனை மரித் தோரிலிருந்தெழுப்ப வல்லவராயிருக்கி றாரென்று அறிந்திருந்தான். அங்கிருந்து அவனைத் திரும்பவும் தெருச்சந்தியில் பெற்றுக்கொண்டான். ஆபிரகாம் தெருச் சந்தியை அடைந்தான். அவன் தேவனை விசுவாசித்து, தேவனுடைய அற்புதங்கள் அனைத்தும் கண்ட பின்பு, வாக்குத்தத்தம்

பண்ணப்பட்ட குமாரனைப் பெற்றுக் கொள்ள அவன் இருபத்தைந்து வருடம் காத்திருந்தான். அவன் எதற்காக காத் திருந்தானோ, அதை கொண்டு போய் பலி செலுத்த தேவன் அவனுக்குக் கட்டளை யிட்டார். என்னே, ஓ, என்னே ஒரு சோதனையின் நேரம்! ஆனால் ஆபிரகாம் தடுமாறினானா? ரோமர் 4ம் அதிகா ரத்தைப் படியுங்கள். அவன் முழு நிச்சய மாய் நம்பினான்.'' ஆமென். தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று அவன் முழு நிச்சயமாக நம்பினான். ஆமென். அவர் தெருச்சந்தியை அனுமதித்தார். அவர் மரித்தோரை உயிரோடெழுப்ப வல்லவர் என்பதை ஆபிரகாமின் மூலம் அவர் நமக்குக் காண்பிக்கிறார், பாருங்கள்.

230. ஆபிரகாம், ''அவனை மரித்தோரி லிருந்து பெறுவது போல பெற்றுக்கொள்கி றேன்" என்றான். சாராளின் கர்ப்பம் செத் திருந்தது. அவனுடைய சரீரமும் செத்திருந் தது. அவன் வயது சென்றவன். குழந்தைக் குப் பாலூட்ட அவளுக்கு பால் சுரப்பிகள் இல்லை. அவர்களுக்கு ஒன்றுமில்லை. அவன் ஆண்மைத்துவத்தை இழந்திருந் தான், அவளும் கர்ப்பந்தரிக்க இயலாத நிலையில் இருந்தாள். பாருங்கள்? எந்த ஒரு வழியும் இல்லை. மரித்தோரி லிருந்து அவனைத் திரும்பப் பாவனையாகப் பெற்றுக்கொண்டான். அவன், "தேவனால் அதை செய்யக் கூடுமானால், அவனை அவர் மரித்தோரிலிருந்தும் உயிரோ டெழுப்ப முடியும். குழந்தை பிறக்கு மென்று உரைத்த அதே தேவன் - அவர் கூறினபடியே குழந்தை பிறந்தது -

அவனை மரித்தோரிலிருந்தும் உயிரோ டெழுப்ப வல்லவராயிருக்கிறார்" என் றான். அவரிடத்தில் அன்பு கூருகிறவர் களுக்கு அவர் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி செய்கிறார். ஆமென்.



எந்த தேசம் வரைக்கிலும்?
“உலகமெங்கும்.” எவ்வளவு-எவ்வளவு
பேருக்கு? “சர்வ சிருஷ்டிக்கும்.”
அந்தவிதமாக இங்கே “உலகத்தின்
முடிவு பரியந்தமும்” அது
பிரசங்கிக்கப்பட வேண்டும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 60-1210 — பிலதெல்பியா சபையின் காலம்

*43 எழுத்துத் துறையில்-எழுத்துத் துறையில் எடுத்துக் கொண்டால் சுவிசேஷ செய்தியானது கைப்பிரதிகள் புத்தகங்கள் ஆகியவற்றின் வாயிலாக வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு தேசத்தையும் நீண்ட காலமாக சென்றடைந்து கொண்டிருக்கிறது. எனவே, நீங்கள் பாருங்கள், இயேசுவானவர் கூறிக் கொண்டிருந்தது இதைப் பற்றியல்ல என்பது நிரூபணமாகிறது. அவர் ஒருபோதும், "உலகமெங்கும் போய் வேதாகம பள்ளிகளை உண்டாக்குங்கள்" என்று கூறவில்லை. மேலும் அவர் "உலகமெங்கும் போய் பத்திரிக்கைகளையே விநியோகியுங்கள்" என்றும் கூறவேயில்லை.*

*44 அந்தக் காரியங்கள் அருமையா யிருக்கின்றன, ஆனால் அவருடைய கட் டளை சபைக்கு என்னவாயிருந்ததென்றால், "உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்பதேயாகும். சுவிசேஷ மானது முற்றும் வெறும் வார்த்தையாக இருக்கவில்லை. ஆனால் அது வார்த்தையை ஜீவிக்கச் செய்கிறதாக இருக்கிறது. புரிகிறதா? ஏனெனில் இயேசு, உடனடியாக, "விசுவா சிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்க ளாவன்" என்றும் கூறினார். சபைக்கான அவரது கடைசி-அவரது கடைசிக் கட்ட ளையைக் கொண்ட மாற்கு 16-ம் அதிகாரம் உங்களுக்குத் தெரியும்: "விசுவாசிக்கிறவர் களால் நடக்கும் அடையாளங்களாவன." மத்தேயு 10-ம் அதிகாரத்தில் சபைக்கு அவ ருடைய முதல் கட்டளையென்னவெனில், "வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்குங்கள். மரித்தோரை எழுப்புங்கள். பிசாசுகளைத் துரத்துங்கள், இலவசமாய்ப் பெற்றீர்கள்,*

இலவசமாய்க் கொடுங்கள்" என்பதாயிருந்தது. சபைக்குரிய அவரது கடைசிக் கட்டளை யானது என்னவெனில், "நீங்கள் உலக மெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசே ஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவ னாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக் கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான், விசுவாசிக்கிற வர்களால் நடக்கும் அடையாளங்களாவன;" என்பதாகும்.

*45* அநேகர் இங்கே இப்பகுதியை துண்டித்துவிடுகிறார்கள் அல்லவா? "*மற்றும்*" என்பது வாக்கியத்தை ஒன்று சேர்க்கின் றதாயுள்ளது. பாருங்கள்? இப்பொழுது அவர், ("நீங்கள் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கி யுங்கள்" என்று மட்டும் அனேக ஊழியக் காரர்கள் கூறுவார்கள்.) "இப்பொழுது விசு வாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், *மற்றும்* விசுவாசியாத வனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படு

வான், மேலும் இந்த அடையாளங்கள் அவர்களைப் பின்தொடரும். அவர்களை பின் தொடரும்: விசுவாசிக்கிறவர்களையே. என்னுடைய நாமத்தினால் பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள், சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும், அது அவர்களைச் சேதப்படுத்தாது: வியாதி யஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப் பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்'' என் றார். ஜீவனுள்ள தேவனின் அடையாளங்கள் ஜனங்கள் மத்தியில் அசைவாடிக் கொண் டிருக்கின்றன, ஓ! எவ்வளவு தூரத்திற்கு? உலகம் முழுவதிலும், நீங்கள் அதை அறிந்து கொண்டீர்களா? உலகம் முழுவதிலுமே.

46 ஆகவே நான் பெந்தெகொஸ்தே செய்தியானது என்று கூறும்பொழுது... (இப் பொழுதிருக்கிற பெந்தெகொஸ்தே ஸ்தாபனத் தைப் பற்றி நான் குறிப்பிடவில்லை.) பெந் தெகொஸ்தே செய்தி மாத்திரமே தேவ

னிடத்திலிருந்து வந்துள்ள ஒரே உண்மை யான செய்தியாக இருக்கிறது. இப்பொழுது மாற்கு 16-ம் அதிகாரத்தைப் பாருங்கள். நீங்கள் அதை வாசித்துப் பார்ப்பீர்களா?, சரி, இங்கே இயேசு தனது சபைக்கு கட்டளை யிட்டார்; அதாவது "உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; இவ்வடை யாளங்கள்: அந்நிய பாஷைகளில் பேசுதல், பிணியாளிகளைச் சொஸ்தப்படுத்துதல், அற் புதங்களை நடப்பித்தல்..." போன்றவை நடைபெறும் என்று கூறினர். எந்த தேசம் வரைக்கிலும்? "உலகமெங்கும்." எவ்வளவு- எவ்வளவு பேருக்கு? "சர்வ சிருஷ்டிக்கும்." அந்தவிதமாக இங்கே "உலகத்தின் முடிவு பரியந்தமும்" அது பிரசங்கிக்கப்பட வேண் டும். சரி. இந்த சபைக்கு மட்டும்தானா இவ்வடையாளங்கள் பின் தொடரும்? "உலகெங்கும் விசுவாசிக்கிறவர்களை இவ் வடையாளங்கள் பின் தொடரும். முழு உலகத்திற்கும், சர்வ சிருஷ்டிக்குமே இவ்

வடையாளங்கள் பின் தொடரும்,'' *இது* மட்டுமல்ல, *விசுவாசிக்கிறவர்களையெல்லாம்,* எனவே அதுவே ஒரு பெந்தெகோஸ்தே சபை யாக உள்ளது. புரிகிறதா?



# ஒருவன் அழகுள்ள பெண்ணைத் தெரிந்து கொண்டான். மற்றவன் பண்பைத் தெரிந்து கொண்டான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-04-29E மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்

35 நான் அநேக தம்பதிகளுக்கு மணம் புரிந்து வைத்திருக்கிறேன். நான் எப்பொழுதும்... அது கிறிஸ்துவையும் மணவாட்டியையும் எனக்கு ஞாபகப்படுத்துகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கு நான் நடத்தின விவாகங்களில் ஒன்று, என் வாழ்க்கையில் மிகவும் சிறந்த ஒன்றாகத் திகழ்ந்தது. அது அநேக ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு வாலிப போதகராக இருந்த போது.

என் சகோதரன் டபிள்யூ.பி.ஏ.யில் (W.P.A) பணிபுரிந்து கொண்டிருந்தார். உங்களில் யாருக்காவது அது இன்னமும்

ஞாபகத்தில் உள்ளதா இல்லையா என்று எனக்குத் தெரியாது - என் வயதுள்ள வர்களுக்கு. அது அரசு மேற்கொண்ட ஒரு திட்டம் (Project) என் சகோதரன் முப்பது மைல் தொலைவில் பணிபுரிந்து கொண் டிருந்தார். அவர்கள் ஏரிகளை வெட்டினர் தண்ணீரை நஷ்டப்படுத்தாமல் அதை சேமித்து வைக்க. நான் வசித்த ஜெபர் ஸன்வில்லிலிருந்து நூறு மைல் தொலை வில் உள்ள இந்தியானா போலீஸை சேர்ந்த ஒரு பையன் அவருடன் பணி புரிந்து கொண்டிருந்தான். அங்கு ஒரு... அவன் ஒரு நாள் என் சகோதரனிடம், “டாக் (Doc), விவாகம் நடத்த போதகருக்கு செலுத்த வேண்டிய காணிக்கைக்கு போதிய பணம் என்னிடமிருந்தால் நான் விவாகம் செய்து கொள்வேன்” என்றான். அவன், “அதற்காக லைசென்ஸ் பெற என்னிடம் போதிய

பணம் உள்ளது. ஆனால் போதகருக்குக் கொடுக்கத் தான் பணம் இல்லை" என்றான்.

அப்பொழுது டாக் அவனிடம், "என் சகோதரன் போதகர். அவர் ஒருக்கால் உனக்கு விவாகம் செய்து வைக்கலாம். இதற்கெல்லாம் அவர் பணம் வாங்குவது கிடையாது" என்றார்.

அப்பொழுது அவன், "எனக்கு விவா கம் நடத்தி தருவாரா என்று அவரைக் கேட்பீர்களா?" என்றான்.

36. அன்றிரவு என் சகோதரன் இதைக் குறித்து என்னிடம் கேட்டார். நான், "அவர்கள் ஏற்கெனவே வேறு யாரையும் விவாகம் செய்து கொள்ளாமலிருந்தால், சட்டப்படி எல்லாம் ஒழுங்காக இருந்தால்,

நான் நடத்தி வைக்கிறேன்” என்று ஒப்புக் கொண்டேன்.

அவர்... அவனைக் கேட்பதாகக் கூறி னார். நான், “எல்லாம் சரியாயிருந்தால், அவனை இங்கு வரச் சொல்லுங்கள்” என்றேன்.

சனிக்கிழமை அந்த பையன் வந்தான். அதை நினைத்துப் பார்க்கும் போது, அது என் வாழ்க்கையில் நடந்த ஒரு விசேஷித்த சம்பவம். அன்று பகல் மழை பெய்து கொண்டிருந்தது. ஒரு பயை ஷெவர்லே கார், அதன் விளக்குகள் 'பேல்' கம்பியைக் கொண்டு (Baling wire) மின்சாரத்துக்காக இணைக்கப்பட்டதாய் அங்கு வந்து நின்றது. என் மனைவியை இழந்த சில நாட்களுக்கு பின்பு இது நடந்தது. நான் இரு சிறிய அறைகளில் தங்கியிருந்தேன்.

'டாக்'கும் அப்பொழுது என்னுடன் கூட அவர்களிருவருக்காகவும் காத்துக் கொண் டிருந்தார். அந்த பையன் காரை விட்டு இறங்கினான் காண்பதற்கு அவன் மண மகன் போலவே எனக்குத் தோன்ற வில்லை. அப்படி யாருக்குமே தோன்றி யிருக்க முடியாதென்று கருதுகிறேன். அக்காலத்தில் ஒன்றரை டாலருக்கு ஒரு நல்ல ஜதை காலணிகள் வாங்க முடியும். அவனோ கிழிந்து போன காலணிகளை அணிந்திருந்தான். அவனுடைய கால் சட்டை 'தொள தொள'வென்றிருந்தது. அவன் மூஞ்சூறு தோலினால் செய்யப் பட்ட 'ஜாக்கெட்' (Mole Skin Jacket) ஒன்றை அணிந்திருந்தான். பழைய காலத் தவராகிய உங்களில் சிலருக்கு அது ஞாபகமிருக்கும். அது சலவை இயந் திரத்தில் போடப்பட்டு, தண்ணீரில் அலசா

தது போல் சுருங்கிக் காணப்பட்டு, மூலைகள் கட்டப்பட்டிருந்தன.

37. ஒரு சிறிய பெண் கட்டம் போட்ட உடை ஒன்றை அணிந்து காரின் மறு பக்கத்திலிருந்து இறங்கி வந்தாள். எனக்கு தெரியவில்லை. ஒரு முறை அப்படிப்பட்ட துணியை தவறான பெயரால் அழைத்து விட்டேன். அதன் பெயர் 'ஜிங்காம்' (Gingham) எனவே அது... அதை மறுபடியும் தவறாகக் கூறுகிறேன். நான் எப்பொழுதுமே அதன் பெயரை தவறாக கூறுகிறேன். நான் சொன்னேன்... அவள் காரிலிருந்து இறங்கி வந்தாள். அவர்களிருவரும் படிக்கட்டுகள் ஏறி வந்தனர். அவர்கள் உள்ளே வந்த போது, அந்த ஏழை பெண்... நான் நினைக்கிறேன் அவள்... அவள் அணிந்து கொண்டிருந்த

தெல்லாம் ஒரு பாவாடை மாத்திரமே. அவள் காலணிகள் ஒன்றும் அணிந்திருக்க வில்லை. அவள் இந்தியானா போலீஸி லிருந்து நடந்தும், நடுநடுவே காரில் பிரயாணம் செய்தும் வந்தாள். (hitch-hike) அவளுடைய நீண்ட கூந்தல் பின்னப்பட்டு, பின்னால் தொங்கிக் கொண்டிருந்தது காண்பதற்கு மிகவும் சிறிய பெண்.

நான் அவளிடம், “விவாகம் செய்து கொள்ள உனக்குப் பெரிய வயதாகி விட்டதா?” என்று கேட்டேன்.

அவள், “ஆம் ஐயா” என்று பதிலளித்து விட்டு “என் பெற்றோர் எழுதிக் கொடுத்த அனுமதியை வைத்திருக்கிறேன். நான் லைசென்ஸ் பெற அதை நீதிமன்றத்தில் காண்பிக்க வேண்டும்” என்றாள்.

நான், “சரி, இந்த விவாகத்தை நடத்தி வைக்கும் முன்பு உங்களிடம் சற்று பேச விரும்புகிறேன்” என்றேன்.

அவர்கள் உட்கார்ந்தனர். அவன் அறையை சுற்றும் முற்றும் பார்த்தான். அவனுடைய தலைமயிர் வளர்ந்து போய், அது வெட்டப்பட வேண்டியதாயிருந்தது. அவன் சுற்றும் முற்றும் அறையைப் பார்த்துக் கொண்டே இருந்த காரணத்தால், நான் சொல்வதை அவன் கவனிக்க வில்லை. நான், “மகனே, நான் சொல்வதை கவனமாகக் கேட்கவேண்டும்” என்றேன்.

அவன், “சரி, ஐயா” என்றான்.

நான், “இந்தப் பெண்ணை நீ நேசிக்கி றாயா?” என்று கேட்டேன்.

அவன், “ஆம் ஐயா நான் நேசிக்கிறேன்” என்றான்.

நான், “அவளை விவாகம் செய்து கொண்ட பின்பு அவளைக் கூட்டிச் செல்ல ஒரு வீடு இருக்கிறதா?” என்றேன்.

அவன், “ஆம் ஐயா” என்றான்.

நான், “சரி, உன்னை ஒன்று கேட்க விரும்புகிறேன். நீ பி. டபிள்யூ. ஏ.வில் வேலை செய்வதாக கேள்விப்படுகிறேன்” என்றேன்.

அவன், “ஆம் ஐயா” என்றான் (வாரத்துக்கு பன்னிரண்டு டாலர் சம்பளம்)

நான், “அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்து தர முடியுமென்று நினைக்கிறாயா?” என்றேன்.

அவன், “என்னால் முடிந்த அனைத்தும் செய்வேன்” என்றான்.

நான், “அது சரி அவனை வெளி யாக்கினால்... சகோதரியே அவனுக்கு வேலை போய்விட்டால் நீ என்ன செய் வாய்? உன் தாயிடமும் தந்தையிடமும் ஓடிப்போய் விடுவாயா?” என்று கேட் டேன்.

அவள், “இல்லை ஐயா. நான் அவ ருடன் தங்கியிருப்பேன்” என்றாள்.

நான் அவனிடம், “ஐயா உனக்கு மூன்று நான்கு பிள்ளைகள் இருந்து அவர்களுக்கு உண்ண உணவு இல்லாமல் உனக்கும் வேலையில்லாமல் இருந்தால் நீ என்ன செய்வாய்? அவளை அனுப்பிவிடு வாயா?”

அவன், “இல்லை, ஐயா நான் கஷ்டப் படுவேன். நாங்கள் எப்படியாவது சமா ளிப்போம்” என்றான்.

அதைக் கேட்ட போது, நான் சிறியவன் என்னும் உணர்ச்சி ஏற்பட்டது. அவன் அவளை உண்மையாகவே நேசிக்கிறான் என்பதை அறிந்து கொண்டேன். அவர்கள் ஒருவரையொருவர் நேசித்தனர். அவர்க ளுடைய விவாகத்தை நடத்தி வைத்தேன்.

38. அவன் அவளை எங்கு கொண்டு சென்றான் என்று வியந்தேன். சில நாட்களாக என் டாக் சகோதரனிடம், “அது எங்குள்ளது?” என்று கேட்டேன்.

அவர், “நியூ ஆல்பனிக்குச்செல்” என் றார் (அது எங்களுக்கு கீழேயுள்ள ஒரு சிறு பட்டினம்) அந்த ஆற்றங்கரையில் சிறிது

தகரம் இருக்கும். நான் மின்சார வாரி யத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த போது. மற்ற அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து கொண்டு அரட்டை அடித்து சிரித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், நான் மட்டும் வண்டியில் ஏறி ஆற்றங்கரைக்கு சென்று ஜெபம் செய்து, முன்பு இரும்புத் தொழில் நடந்து கொண்டிருந்த தகரக் கொட்டகை யில் வேதாகமத்தைப் படிப்பது வழக்கம்.

அங்கு பழைய பெட்டி கார்கள் (Box cars) இருக்கும். இந்த பையன் அவை களில் ஒன்றை எடுத்து ஒரு கதவை அறுத்து. செய்தித்தாள்களையும் இணைக் கும் டாக்கி பொத்தன்களையும் (Tacky buttons) எடுத்துக்கொண்டு “டாக்கி பொத் தான்கள்” என்றால் என்னவென்று எத்தனை பேருக்குத் தெரியும்? அப்படியானால் கென்டக்கி நாட்டவர் யாரும் இங்கில்லை.

ஒரு அட்டைத் துண்டை எடுத்து, அதில் கட்டை விரல் இணைப்பு ஆணியை (Thumbtack) சொருகி அதை உள்ளே தள்ளுவது... அதுதான் "டாக்கி பொத்தன்"

39. அவர்கள் பெட்டி கார்களை அங்கு வைத்திருந்தனர். அவன் அந்த இரும்புத் தொழிற்சாலைக்கு சென்று, அவைகளில் ஒன்றை வாங்கி அதற்கு படிக்கட்டுகள் செய்தான். பின்பு அவன் பழைய பெட்டி களை வாங்கி, மேசையை செய்தான். ஒரு நாள் நான் "அவர்கள் எப்படியிருக்கி றார்கள் என்று பார்த்துவிட்டு வரலாம்" என்று எண்ணினேன்.

அதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு நான் ஈ. வி. நைட் என்பவரின் மகளை ஈ.டி. ஸ்லைடர் என்பவரின் மகனுக்கு திரு மணம் செய்து வைத்தேன். ஒஹையோ

விலுள்ள மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவர் ஈ.வி. நைட் ஆவார். அவர் முன் கூட்டி உண்டாக்கும் கான்கிரீட் பலகை களைக் கொண்டு வீடு கட்டும் (Prefab houses) தொழிற்சாலை ஒன்றை நடத்து கிறார். திரு. ஈ.டி. ஸ்லைடர் என்பவர் மணல், கருங்கல் ஜல்லி (gravel) போன்ற வைகளை விற்கும் கம்பெனியின் அதிபர். இருவருமே கோடீஸ்வரரின் பிள்ளைகள். அவர்கள் திருமணத்தை நான் நடத்தி வைத்தேன்.

அதை நடத்துவதற்காக நான் ஓரிடத் திற்குச் சென்று பயிற்சி எடுத்துக் கொண் டேன். ஒரு அறைக்கு சென்று தலையணை யின் மேல் முழங்கால் படிவதும், அந்த ஆடம்பரங்கள் அனைத்தும் நான் முன்கூட்டியே செய்து பார்த்து, பின்பு அவர்களுடைய திருமணத்தை நடத்த

வேண்டியதாயிற்று. திருமணம் முடிந்து அவர்கள் வெளியே வந்தபோது... இந்த ஏழை தம்பதிகளும் ஒரு பழைய அறை யில் நின்று கொண்டு - அங்கு எங்களுக்கு ஒரு சிறு படுக்கை இருந்தது. அதே திருமண ஒழுங்கின்படி விவாகம் செய்து கொண்டனர்.

40. இந்த பணக்காரத் தம்பதிகளை விஜயம் செய்து விட்டு வரலாமென்று ஒரு நாள் புறப்பட்டுச் சென்றேன். அவர்கள் வேலை செய்ய வேண்டிய அவசிய மில்லை. அவர்களுடைய பெற்றோர்கள் கோடீஸ்வரர்கள். அவர்களுக்கு ஒரு நல்ல வீடு இருந்தது. வெளிப்படையாகக் கூறி னால், ஈ.வி.நைட்டின் மாளிகையிலுள்ள கதவுகளின் கைப்பிடிகள் அனைத்துமே பதினான்கு காரட் தங்கத்தினால் ஆனவை. அதிலிருந்து அவர்கள் எப்படிப்பட்ட

வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதை நீங்கள் அறியலாம். அவர்கள் வேலை செய்ய வேண்டிய அவசியமேயில்லை. அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒரு நல்ல காடிலாக் கார் கொடுக்கப்பட்டது. அவர்களிருவரும் தங்கள் பெற்றோருக்கு ஒரே பிள்ளை அவர்களுக்கு வேண்டிய அனைத்தும் இருந்தது.

ஒரு நாள் அவர்களுடைய வீட்டுக்கு நான் சென்றிருந்தேன். நான் எப்படி அவர்களுக்கு அறிமுகமானேன் என்றால். அவர்களுடைய நண்பர்களில் ஒருவர் எனக்கு நெருங்கிய நண்பர் ஆவார். நாங்கள் அனைவரும் ஒன்றாகப் பழகி நண்பர்களானோம், அப்படித்தான் நான் அறிமுகமானேன். அப்பொழுது, நான் அவர்களுக்கு விவாகம் செய்து வைக்க

வேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டனர்.

41. எனவே அவர்களை நான் காணச் சென்றேன். என் பழைய ஃபோர்ட் காரை விட்டு வெளியே இறங்கி, படிகளில் ஏறி அருகே சென்ற போது, அவர்களுடைய சத்தம் எனக்கு கேட்டது. அவர்கள் சண்டை யிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொண் டிருந்தனர். அவர்கள் நடனமாடச் சென் றிருந்தனர். அவள் சிறந்த அழகி, அழகு ராணிகளில் ஒருவள். அவள் அழகு போட்டிகளில் அநேக விருதுகளைப் பெற்று, சில கார்களையும் கூட பரிசாக வென்றவள்.

அவர்களை நான் பார்த்த போது, அவன் ஒரு மூலையிலும், அவள்

வேறொரு மூளையிலும் உட்கார்ந்து கொண்டு, அவளுடன் நடனமாடின ஒரு பையனை அல்லது ஒரு பெண்ணைக் குறித்தோ வீண்வாதம் செய்து கொண் டிருந்தனர். அவர்கள் என்னைக் கண்ட வுடன் வேகமாக குதித்தெழுந்து, ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு கத வண்டையில் வந்து, “ஹல்லோ சகோ, பிரன்ஹாமே எப்படியிருக்கிறீர்கள்?” என்று கேட்டனர்.

நான், “நன்றாயிருக்கிறேன். நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

அவன், “ஓ, நாங்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம். இல்லையா, தேனே?” என்றான்.

அவள், “ஆம் அன்பே” என்றாள்.

42. பாருங்கள், உண்மையாயிராத ஒன்றை நீங்கள் இருப்பது போல் காண் பித்து பாசாங்கு செய்கிறீர்கள். தீட்டப்பட்ட சித்திரத்தினால் உங்களுக்கு வெப்பம் கிடைக்காது. இங்குள்ள சில சபைகள், ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பு நடந்த பெந்தெகொஸ் தேயை வர்ணச் சித்திரமாக்க முயல்வது போன்று. வர்ணச் சித்திரத் தீயிலிருந்து உங்களுக்கு வெப்பம் கிடைக்காது. அன்று இருந்தது போலவே இன்றும் பெந்தெ கொஸ்தே உண்மையாயுள்ளது. அக்கினி இன்னும் விழுந்து கொண்டிருக்கிறது. அது வர்ணச் சித்திரத்தின் நெருப்பல்ல. அது உண்மையான அக்கினி. அப்படித்தான் அவர்கள் இருந்தனர். அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ எனக்கு பிரியமில்லை.

43. மலைச் சிகரத்துக்கு மறுபுறம் ஆற்றங்கரையில் அந்த மற்ற தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். ஒரு சினிக்கிழமை பகல் நான் மெல்ல நழுவிச் சென்று, அவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்து வரலாம் என்று எண்ணினேன். என் முகம் அழுக்கு படிந்திருந்தது. நான் உடுத்தி யிருக்கு பணி உடையும் அழுக்காயிருந் தது. என்னிடம் வேலை சாமான்கள் இருந்தன. மின்னலினால் எத்தனை இன்ஸ லேட்டர்கள் சேதமடைந்துள்ளன என்று ஆற்றங்கரையிலுள்ள மின்சாரக் கம்பி களின் வழியாக நடந்து பார்வையிடுவது போல், நான் மெல்ல நழுவி அவர்களைக் காணலாமென்று எண்ணினேன். நான் சென்ற போது, அந்த பழைய ஷெவர்லே கார் முன்பாகத்தில் நின்று கொண்டிருந்தது. அதுதான் அவர்கள் விவாகத்தை நடத்தி

வைத்து ஏறக்குறைய ஒரு ஆண்டு கழித்து, அங்கு... கதவு திறந்திருந்தது, அவர்கள் உரையாடுவதை என்னால் கேட்க முடிந்தது.

அப்படிக் கூறுவது மாய்மாலம் எனவே அவர்கள் என்ன உரையாடுகின்றனர் என்பதை தெளிவாகக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டுமெனக் கருதி, நான் அருகில் சென்றேன். நான் ஒன்றை நன்கு கண்டு கொண்டு, அதன் பின்பு என்ன பேசுகிறேன் என்பதை அறிந்திருக்கிறேன். என்னும் நிச்சயத்தை உடையவனாயிருக்க விரும்புகிறேன். தேவனுடைய வார்த்தை யைக் குறித்த விஷயத்திலும் நான் அப்படித்தான் செய்கிறேன். அது சத்தியம் தானா? இல்லையா? அவர் தமது வார்த்தையை நிறைவேற்றுவரா? அவர் வார்த்தையை எப்பொழுதும் நிறை வேற்றி

வருகிறாரா? போன்றவைகள். அவர் தமது வார்த்தையை நிறைவேற்றாமல் போனால், அவர் தேவன் அல்ல பாருங்கள். அவர் வார்த்தையை நிறைவேற்றினால் அவர் தேவன், பாருங்கள்.

44. அவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று அறிய விரும்பினேன். எனவே அவர்களுடைய வீட்டின் பக்கத்தில் மெல்ல நழுவிச் சென்றேன். அப்பொழுது அவன் “தேனே, அதை உனக்கு எப்படி யாவது வாங்கித் தர வேண்டுமென்று நினைத்தேன்” என்று கூறுவதைக் கேட்டேன்.

அவள், “இனியவரே, பாருங்கள். இப்பொழுது எனக்கு இருக்கிற உடை போதும், அது மிகவும் நன்றதாயிருக்கிறது.

உமது விருப்பத்தை மெச்சுகிறேன். ஆனால் பாருங்கள்...” என்றாள்.

நான் அந்த பெட்டிக்காரின் கதவு திறந்திருக்கும் பக்கம் சென்றால், அங் குள்ள பிளவின் (Crack) வழியாக பார்க்க லாமே என்று கருதி, வீட்டைச் சுற்றி மறுபக்கம் மெல்லச் சென்றேன். அவன் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தான். அவள் அவன் மடியில் அமர்ந்திருந்தாள். அவனுடைய கை அவள் தோளின் மேலும், அவளுடைய கை அவனுடைய தொளின் மேலும் இருந்தது அவன் சிறு துவாரம் கொண்ட பழைய தொப்பி ஒன்றை வெளியே எடுத்து அதிலிருந்த தன் ஊதியத்தை மேசையின் மேல் கொட்டி னான். அவன், “மளிகை சாமான்களுக்கு இவ்வளவு, காப்பீட்டுக்காக இவ்வளவு,

காருக்காக இவ்வளவு என்று பங்கிட்டான். அவர்களால் செலவை சமாளிக்க முடிய வில்லை". என்ன நடந்ததென்றால், அவன் கடை சன்னலில் ஒரு உடையைக் கண்டான் (அவன் அதை இரண்டு வாரங்களாக பார்த்துக் கொண்டே வந்தான்). அதன் விலை ஒரு டாலர், அதை அவனுடைய மனைவிக்கு வாங்கித் தர விரும்பினான். அவன் தேனே, "அதை அணிந்து கொண் டால், நீ மிகவும் அழகாயிருப்பாய்" என்றான்.

அவளோ, "தேனே, எனக்கு ஒரு உடை இருக்கிறதே, எனக்கு அது தேவை யில்லை" என்றாள்.

பார்த்தீர்களா? அந்த சிறு ராணி...

45. நான் பின்னால் அடி எடுத்து வைத்து திரும்பிப் பார்த்தேன். அந்த செல்வந்தரின் வீட்டின் உச்சியிலுள்ள கோபுரத்தை என்னால் காண முடிந்தது. அங்கு நான் நின்று கொண்டு சில நிமிடங்கள் அதையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். “உண்மையில் யார் பணக்காரன்?” என்று நான் சிந்தித்தேன். நான், “பில் பிரன்ஹாமே, இவ்விரண்டில் ஒரு இடத்தை நீ தெரிந்து கொள்ள வேண்டுமானால், நீ எந்த இடத்துக்கு செல்வாய்?” என்று மனதில் எண்ணினேன்.

மலையின் மேலுள்ள அந்த அழகான மாளிகையை நான் தெரிந்துகொள்ள மாட்டேன். ஆனால் கீழேயுள்ள வீட்டைப் பேணிப் பாதுகாக்கும் பெண்ணைத் தெரிந்துகொள்வேன் - என்னை நேசித்து,

என்னுடன் தங்கி, எனக்காக ஒரு நல்ல குடும்பத்தை அமைத்து, தனக்கு வேண்டிய பொருள்களுக்காக என் இரத்தத்தை உறிஞ்சாமல் என்னுடன் தங்கி என்னில் ஒரு பாகமாக இருப்பவளை.

46. அந்த சம்பவம் எப்பொழுதும் என் இருதயத்தில் நிலை கொண்டுள்ளது. ஒருவன் அழகுள்ள பெண்ணைத் தெரிந்து கொண்டான். மற்றவன் பண்பைத் தெரிந்து கொண்டான். அதைதான் நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக அவளிடம் பண்பு உள்ளதா என்று பாருங்கள். அதன் பின்பு அவளை நீங்கள் நேசித்தால், மிகவும் நலமாயிருக்கும்.

# கழுகின் சத்தம்

## மார்ச் 18, 2024

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து